# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110288

1. District மாவட்டம் : பெரம்பலூர். PS: காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 03 Date: நாள் 07.04.2021

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 2021.
   (ii) Act சட்டம்: PC-Act-1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7.
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 07.04.2021 — Date to : நாள் வரை 08.45 hrs.
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 07.04.2021 — Time to : நேரம் வரை 10.30 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.04.2021 — Time : நேரம் 13.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சிவன் நகர், பெரம்பலூர். கிழக்கு 2km தொலைவு.
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K.வெங்கடேசன் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o [illegible].
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 45/2021. — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் காவலர். — (g) Address : முகவரி C2 - காவலர் குடியிருப்பு ஆயுதப்படை, துறைமங்கலம், பெரம்பலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   அப்பு என்கிற அப்போஸ்தன், [illegible], பெரம்பலூர் நகராட்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

இன்று 07.04.2021 மதியம் 13.00 மணிக்கு பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளராகிய நான் தேர்தல் அலுவல் முடித்து அலுவலகத்திற்கு வந்த போது பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் K.வெங்கடேசன், வயது 45/2021, த/பெ கிருஷ்ணன், C-2 காவலர் குடியிருப்பு, ஆயுதப்படை, தண்ணீர்பந்தல், பெரம்பலூர் மாவட்டம் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகார் மீது நடவடிக்கை எடுக்க சொல்லி கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர், K.வெங்கடேசன், வயது 45/2021, த/பெ கிருஷ்ணன், C-2 காவலர் குடியிருப்பு, ஆயுதப்படை, தண்ணீர்பந்தல், பெரம்பலூர் மாவட்டம். பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, பெரம்பலூர். அம்மா, நான் காவல் துறையில் பணியாற்றி வருகிறேன். நான் பெரம்பலூர் ஆயுதபடை காவலர் குடியிருப்பில் எனது மனைவி ரேவதி மற்றும் 2 பிள்ளைகளுடன் வசித்து வருகிறேன். 10-ம் வகுப்பு வரை படித்துள்ளேன், கடந்த 2020-ம் ஆண்டு ஜனவரி மாதம் சில்வர் நகர், எலம்பலூர் ரோடு, பெரம்பலூர் வடக்கு, பெரம்பலூர் என்ற இடத்தில் உள்ள புதிய புல எண் 364/3A1-ல் 6 ¾ செண்ட் வீட்டு மனையை என் மனைவி விலைக்கு வாங்கினார். அந்த இடத்தில் வீடு கட்ட தீர்மானித்து பெரம்பலூர் நகராட்சியில்

(Separate sheet enclosed)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு K.வெ 07.04.21

R. Rathinavalli.
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
07.04.2021.

Name: பெயர் R. RATHINAVALLI
Rank: நிலை Inspector of Police, V&AC, Perambalur. No. எண் ..........
07.04.2021.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

வரைபட அனுமதிக்கு விண்ணப்பித்து நகராட்சி ஆணையரிடம் செப்டம்பர் மாதம் வரைபட அனுமதி பெற்று, பாரத ஸ்டேட் வங்கி பெரம்பலூர் கிளையில் ரூபாய் 20,00,000/- லட்சம் கடன் பெற்று மனைவி ரேவதி பெயரில் வீடு கட்டினோம். அந்த வீட்டிற்கு புதிதாக வீட்டு வரி விதிப்பு செய்ய வேண்டி பெரம்பலூர் நகராட்சியில் 2021-ம் வருடம் மார்ச் மாதம் 2வது வாரத்தில் என் மனைவி மனு செய்தார். அந்த விண்ணப்பத்தை பரிசீலனை செய்து விட்டு கடந்த மார்ச் மாதம் கடைசி வாரத்தில் பெரம்பலூர் நகராட்சியில் பணிபுரியும் பில்கலெக்டர் ஒருவர் என் வீட்டிற்கு வந்து கட்டிட வேலைகள் முடிவடைந்ததை பார்வையிட்டு வீட்டிற்கு புதிய வரிவிதிப்பு செய்து தருவதாக கூறிவிட்டு சென்றார். இந்நிலையில் கடந்த 31.03.2021-ம் தேதியன்று எனது செல்போன் எண் 9498158910-க்கு ஒரு மெசேஜ் வந்தது. அதில் Dear Revathi W/o Venkatesan your payment of Rs.1874/- for payment of property tax is received via office counter on 31.03.2021. Service req. No.089/001/1/20-21/0029318 என குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை பார்த்த நான் அன்றைய தினமே நகராட்சி அலுவலகம் சென்று Cash கவுண்டரில் விசாரித்தபோது அங்கிருந்தவர் பில்கலெக்டர் அப்பு அவர்களை பார்க்கும்படி கூறினார். நான் அவரிடம் அப்புவா என்று கேட்டதற்கு அவர் பெயர் அப்லோசன் எல்லோரும் அப்பு என்று தான் சொல்லுவார்கள் என்றும், ஆனால் அன்று அவர் அலுவலகத்தில் இல்லை என்றும் சொன்னார். அதனால் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பின்னர் 02.04.2021 தேதி காலை சுமார் 08.45 மணியளவில் நான் வீட்டிலிருந்து பணிக்கு சென்று கொண்டிருக்கும்போது ரோவர் ஆர்ச் ரோட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் நின்றுகொண்டிருந்த ஏற்கனவே எங்க வீட்டிற்கு வந்த பில்கலெக்டர் அவர்கள் என்னை பார்த்தவுடன் என்னை சார் என்று கூப்பிட்டார். நான் அவரிடம் சென்று எனது வீட்டு வரி தொடர்பாக ரசீது கேட்டேன். அப்போது அவர் என்னிடம் வீட்டு வரி ரூ.1,874/- என்றும் அதனை தான் கட்டிவிட்டதாகவும் எனவே வீட்டுவரிக்காக அவர்கட்டிய ரூ.1,874/-ம் மற்றும் அலுவலக செலவுக்கு ரூ.20,000/- என சேர்த்து மொத்தம் ரூ.21,874/- கொடுத்துவிட்டு தன்னிடமுள்ள வீட்டுவரி ரசீதை வாங்கி கொள்ளுமாறு என்னிடம் சொன்னார். நான் என்னிடமிருந்த 2000/- ரூபாயினை எடுத்து ரசீதுக்கு உண்டான பணம் இந்தாங்க என்று கூறி அவரிடம் கொடுத்துவிட்டு ரசீதை கொடுங்கள் சார் என்றேன். அவர் அதனை பெற்றுகொண்டு ரசீது தொகை போக மீதி பணம் தராமல் ரூபாய் 20,000/-த்தை சீக்கிரம் ரெடி பண்ணி கொடுங்க என்றார். வேலைக்கு அவசரமாக போக வேண்டியிருந்ததால் நான் எதுவும் சொல்லாமல் சென்றுவிட்டேன். பின்னர் அன்று சுமார் 11.00 மணியளவில் அவரது செல்போன் நம்பர் 9500882022—லிருந்து எனது செல்போன் நம்பருக்கு அழைப்பு வந்தது. நான் பணியில் இருந்ததால் என்னால் போனை எடுக்க முடியவில்லை. அதனால் அன்று பிற்பகல் சுமார் 1.30 மணிக்கு எனது செல்போன் நம்பர் 9498158910-லிருந்து அவரது மேற்படி செல்போன் நம்பருக்கு தொடர்பு கொண்டு பேசினேன் அப்போது அவர் பெரம்பலூர் பாலக்கரையில் உள்ள சாய் சங்கீத் ஹோட்டலில் இருப்பதாகவும் அங்கு வாங்க என்று அழைத்தார். நான் அப்போது பணியிலிருந்ததால் தற்போது வர இயலாது அப்புறம் வருகிறேன் என்று கூறினேன. அவர் சரி என்று சொல்லிவிட்டார். மீண்டும் மறுநாள் 03.04.2021-ம் தேதி காலை சுமார் 08.50 மணியளவில் அவரது செல்போன் நம்பர் 9500882022—லிருந்து எனது செல்போன் நம்பருக்கு அழைப்பு வந்தது. நான் பணியில் இருந்ததால் என்னால் எடுக்க முடியவில்லை. அதனால் மறுநாள் 04.04.2021 அன்று காலை சுமார் 09.40 மணியளவில்

எனது செல்போன் நம்பரிலிருந்து அவரது செல்போனுக்கு தொடர்பு கொண்டு வரிவிதிப்பு ரசீதை கேட்டேன். அப்போது அவர் என்னிடம் அன்று அவரது சொந்த அலுவலாக வெளியே செல்வதாகவும் சீக்கிரம் 20,000/- ரெடி பண்ணிட்டு சொல்லுங்க என்று சொன்னார். நான் எனது வீட்டு வரி ரசீதினை தராமல் பில்கலெக்டர் அப்லோசன் அலைக்களிக்கிறாரே என்ற மன வேதனையில் இருந்தேன். எனக்கு தொடர்ந்து 2 நாள்கள் பணி இருந்தது. இன்று 07.04.2021 தேதி காலை சுமார் 10.30 மணியளவில் நான் புதிதாக கட்டியவீட்டிற்கு அருகில் இருந்தபோது அங்கு வந்த பில்கலெக்டர் அப்லோசன் என்னை பார்த்து சார் எலக்சன் முடிந்த பிறகும் என்னை வந்து பார்க்க வரவில்லையே என்று கேட்டார். நான் அவரிடம் வரி பணத்தை கட்டி விட்டேனே ரசீதை தாங்க சார் நீங்க கேட்ட பணம் 20,000/- இல்லை என்று சொன்னேன். அப்போது அவர் சரி பரவாயில்லை 15,000/- ரூபாய் ரெடி பண்ணிவிட்டு எனக்கு போன் பண்ணுங்க நான் சொல்லும் இடத்துக்கு வந்து கொடுத்திட்டு உங்க வீட்டு வரி ரசீதை வாங்கிக்கிங்க என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். ஆனால் எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. அதனால் நான் எனது சொந்த பணத்திலிருந்து ரூபாய் 15,000/- எடுத்துகொண்டு அவருக்கு கொடுப்பதற்காக வந்தேன். அரசு பணியை செய்ய என்னிடம் ரூபாய் 15,000/- லஞ்சம் கேட்ட மேற்படி பெரம்பலூர் நகராட்சி பில் கலெக்டர் அப்பு என்கிற அப்லோசன் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொள்கிறேன். இப்படிக்கு, sd K.வெங்கடேசன். Inspr.Tmt.R.Rathinavalli to peruse the complaint and to register a case (sd) K.S.Hemachitra, 7/4/2021 (DSP,V&AC). Madam, Received the complaint on 07.04.2021 at 13.00hrs & registered a case in V&AC, Perambalur Cr.No.3/2021 u/s 7 of the Prevention of Corruption Act-1988(as amended in 2018) at 14.15hrs after ascertaining the antecedents of complainant and other facts of the case through sources. (Sd) R.Rathinavalli, Inspector of Police, V&AC, Perambalur. I am submitting the original FIR along with the complaint to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Perambalur and copies of the same has been sent to Superior officers.

R. Rathinavalli.
07.04.2021.

INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption
Perambalur